தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 7432 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.09.</u>**

| | |
|---|---|
| **முன்னிலை :** | **திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர்** |
| **மனுதாரர் :** | **திரு. C.S. சிபி சக்கரவர்த்தி,<br>19/9, மாலை கட்டித் தெரு,<br>சிதம்பரம் – 608 001,<br>கடலூர் மாவட்டம்.** |
| **பொது அதிகார அமைப்பு :** | **பொதுத் தகவல் அலுவலர்,<br>வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை– 600 005.** |
| | **பொதுத் தகவல் அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம்.** |

-------

மனுதாரர் திரு. C.S. சிபி சக்கரவர்த்தி , திரு. V. தீனதயாளன், உதவி ஆணையர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை–5 மற்றும் திரு. S. கேபீரில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் இவ்வாணையத்தில் இன்று (23.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 06.06.08 அன்று 12 இனங்களில் தகவல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மனுதாரருக்கு தகவல் கிடைக்காததால் 31.07.08 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். எந்தவித தகவலும் கிடைக்காததால் 28.03.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று (23.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருவாரூரிலிருந்து 12.05.09 அன்று ஒரு சில தகவல்கள் கிடைக்கப்பெற்றதாக தெரிவித்தார். 18.09.09 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஒரு சில தகவல்கள் கிடைக்கப்பெற்றதாக தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் தகவல் இல்லாததால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலைக்கும் மனுதாரர் கோரும் தகவல்கள் தர மனுதாரரின் மனு அனுப்பப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரரின் மனு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருவண்ணாமலையில் இருந்து தற்பொழுது குறிப்பிட்ட நபர் பணி புரியும் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு 23.03.09 அன்று அனுப்பப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரர் குறிப்பிடும் நபர் தற்பொழுது மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், திருவாரூரில் பணி புரிவதால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தகவல் இருக்க வேண்டும் என்று கருதப்பட்டு திருவண்ணாமலையில் இருந்து அனுப்பப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். மனுதாரரின் மனுவிற்கு ஒரு சில தகவல்கள் தரப்பட்டு இருந்தும் ஒவ்வொரு இனமாக தகவல் தரப்பட்டது குறித்து விசாரிக்கப்பட்டது. இனம் 1, 3 மற்றும் 6–க்கு தகவல் தரப்பட்டு இருந்தும் அதற்கு உரிய ஆவணங்கள் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருப்பதாக அறியப்பட்டது. இனம் 2–க்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூரில் இருப்பதாக விசாரணையில் தெரிய வருகிறது. இனம் 4, 7, 8 மற்றும் 10–க்கு முழுத் தகவல்கள் வழங்கப்பட்டதாகவும், இனம் 9–க்கு குறிப்பிட்ட நபர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பதால் தகவல் வழங்கப்படவில்லை என்றும் விசாரணையில் பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டது. இனம் 5–க்கு குறிப்பிட்டு மாறுதல் பயணப்படி பட்டியல் நகல் வழங்கப்பட்டு இருந்தும் உரிய இணைப்புகள் வழங்கப்படவில்லை என்று விசாரணையில் தெரிய வருவதால் சம்பந்தப்பட்ட இணைப்புகள் அவ்வலுவலகத்தில் இருந்தோ அல்லது மாவட்ட கருவூல அலுவலகத்தில் இருந்தோ அல்லது ஆவணங்களில் இருந்தோ தகவல் வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறது. இனம் 11 மற்றும் 12–க்கு வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் தகவல் இருப்பதால் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1) இனம் 1, 3 மற்றும் 6–க்கு உரிய ஆணையின் நகலை கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்தும், இனம் 2–க்கு மாவட்ட ஆட்சியர்

அலுவலகம், திருவாரூரிலிருந்தும் பெற்று, இனம் 11 மற்றும் 12–க்கு சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்திலிருந்தும் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், வருவாய் நிர்வாகத்துறை, சென்னைக்கு ஆணையிடப்படுகிறது.

2) இனம் 5–க்கு மாறுதல் பயணப் பட்டியல் இணைப்புகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூரில் இருந்தோ அல்லது மாவட்ட கருவூல அலுவலர் அலுவலகத்தில் இருந்து பெற்று மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

3) மனுதாரரின் மனுவிற்கு உரிய தகவலை தராமலும், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அலுவலரையே மனுதாரருக்கு தகவல் வழங்குமாறு தெரிவித்ததற்கும், **பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர்** மீது தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)–ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தைப் பெற்று ஒரு மாதத்திற்குள் இவ்வாணையத்திற்கு அனுப்புமாறு **மாவட்ட ஆட்சியர், திருவாரூர்** கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.09.09
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

( சு. மோகன தாஸ் )
உதவி பதிவாளர்

<u>வழக்கு எண். 7432/09</u>

பெறுநர்
மாவட்ட ஆட்சியர்,
திருவாரூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம்,
சென்னை– 600 005.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவாரூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம்.

திரு. C.S. சிபி சக்கரவர்த்தி,
19/9, மாலை கட்டித் தெரு,
சிதம்பரம் – 608 001,
கடலூர் மாவட்டம்..